<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண். 57/2024</u>

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26–ம் நாள் வெள்ளிக் கிழமை**
வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஸ்வரி | தொழில் | : விவசாயம் |
| கணவர் பெயர் | :கவிநாதன் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தம்பை | வயது | : 30/2025 |

**<u>முதல் விசாரணை :</u>**

(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 05.12.2019 ம் தேதியிட்டு பிரதிவாதியும், வள்ளியம்மையும் எனது கணவருக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்துக்களுக்கு எனது கணவர் பெயரில் புல எண்.170/1 க்கு ஏற்பட்ட கூட்டு பட்டாவினை இணையதள மூலம் பதிவிறக்கப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்துக்களுக்கு எனது கணவர் பெயரில் புல எண்.140/2C க்கு ஏற்பட்ட கூட்டு பட்டாவினை இணையதள மூலம் பதிவிறக்கப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்துக்களுக்கு எனது கணவர் பெயரில் புல எண்.140/2B க்கு ஏற்பட்ட பட்டாவினை இணையதள மூலம் பதிவிறக்கப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 25.10.2023 ம் தேதியிட்டு தாவா சொத்துக்களுக்கு என்னுடைய பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்துக்களுக்கு வாலிகண்டாபுரம் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் கணக்கின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினர் ஆகி விட்டதால், எனவே குறுக்கு விசாரணை இல்லை.